


**12.10.2026**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் அனைத்து துறைகளின் சுயசார்பில் அரசு தனி கவனம் செலுத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

2. வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட பொருளாதார வளர்ச்சியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒருங்கிணைப்பின் தேவையை மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

3. மதுராந்தகம் தாராபுரம் சட்டப்பேரவை உறுப்பினர்களாக திருமதி. மரகதம் குமரவேலும், திருமதி. சத்தியபாமாவும் இன்று பதவியேற்றனர்.

4. தமிழ்நாட்டில் அதிகரிக்கும் அரசி, பருப்பு விலையை கட்டுப்படுத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி கோரியுள்ளது.

5. ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவில் ஸ்ரீ ரெங்கநாச்சியார் நவராத்திரி உற்சவம் இன்று தொடங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

ராஜ்நாத்சிங்

நாட்டின் அனைத்து துறைகளிலும் நவீன தொழில்நுட்பங்களை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளையில் சுயசார்பிலும் அரசு தனி கவனம் செலுத்தி வருவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய ராணுவம் மற்றும் உணவு கழகத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அமைச்சர், ஆயுதங்கள் தொடங்கி தொழில்நுட்பம், ஆடை, பாதுகாப்பு உபகரணங்கள், பயிற்சிகள் அனைத்திலும் நவீனத்துவம் நடைமுறைப்படுத்தப்படுவதை எடுத்துரைத்தார்.

நம் பாதுகாப்பு படைகளுக்கு தேவையான பெருமளவு உபகரணங்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நல்ல உணவு, முறையான உபகரணங்கள், தரமான பயிற்சி, போதுமான வசதிகள் போன்றவை நம் படைவீரர்களுக்கு வழங்கப்படுவதால் உத்வேகத்துடனும், ஊக்கத்துடனும் செயலாற்ற அது வழிகோலுவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

சி. பி. ராதா கிருஷ்ணன்

உலகளாவிய தொடர்புகளின் மத்தியில் அமைதி, பாதுகாப்பு, வளத்தை நிலைநாட்ட சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்றுகுடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்

புதுதில்லி தேசிய பாதுகாப்பு கல்லூரி நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், உலகளாவிய ஒருங்கிணைப்பின் பலன்களை அங்கீகரித்து அவற்றை ஒட்டுமொத்த செயல்திட்டமாக வடிவமைப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

காலநிலை மாற்ற சவால்கள், தீவிரவாத அச்சுறுத்தல் போன்றவற்றிற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

உலக நாடுகளில், இயற்கை பேரிடர் ஏற்படும் போதெல்லாம் உடனடியாக உதவி செய்ய விரையும் முதல்நாடாக இந்தியா திகழ்கிறது என்று அவர் எடுத்துரைத்தார்.

பிறநாடுகள் நம்மீது ஆதிக்கம் செலுத்தாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே நம் தேசம் வலிமை மிகு தேசமாக உருவெடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை எட்ட பொருளாதார வளர்ச்சியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒருங்கிணைய வேண்டியதன் அவசியத்தை மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய வனப்பணி அதிகாரிகள் பயிற்சி நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், இந்திய வனப்பணியாளர்கள் நாட்டின் காடுகளையும், உயிரினங்களையும், சுற்றுச்சூழல் வளத்தையும் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற அறிவுறுத்தினார்.

மனித விலங்கு மோதல்கள், காட்டுத்தீ, காலநிலை மாற்றம், வனப்பாதுகாப்பில் சீரற்ற தன்மை போன்ற சவால்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப அணுகுமுறையும் சமூக பங்களிப்பும் அவசியம் என்று குறிப்பிட்டார்.

வன உயிர் பாதுகாப்பில் இந்தியாவின் முன்னேற்றம், வனப்பரப்பை அதிகரித்தல், கரியமில வாயு வெளியேற்றத்தை தடுத்தல், நிலங்களை மீட்டெடுப்பது போன்ற பணிகள், குடிமக்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

வனப்பாதுகாப்பில் பாரம்பரிய நடைமுறைகளையும் தாண்டி புதிய நிலைப்பாடுகளுடன் செயலாற்றி நீடித்த வளர்ச்சிக்கு பங்காற்ற வனப்பணியாளர்களை கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

சூரியகாந்த்

தேசிய மனித உரிமை ஆணையத்தின் செயலி அறிமுகம் செய்யப்பட்டிருப்பதால் குடிமக்கள் புகார்களை அளித்து அதன் மீதான நடவடிக்கைகளை பார்வையிடலாம் என்று நாட்டின் தலைமை நீதிபதி சூரியகாந்த் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 33-வது நிறுவனநாளை ஒட்டி இன்று உரையாற்றிய அவர், அரசியல் சாசன மீறுதல்களின் போது நீதிமன்றங்கள் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

சமத்துவம், சுதந்திரம், நீதி, மாண்பு, மரியாதை போன்றவற்றை ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசியல் சாசனம் உறுதி செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

புகார் தொடர்பான மனுக்கள் மீது ஆணையம் விசாரணை மேற்கொள்வதுடன், பணிகள் செயலாக்கத்தில் தோல்விகள் ஏற்படும் போது தலையிடுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மனித உரிமைகள் என்பது மனித மாண்புடன் தொடர்புடையது என்று எடுத்துரைத்த அவர், சுகாதாரம், உணவு, தங்குமிடம், வாழ்வாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் போன்றவை அனைவருக்கும் உரியது என்று குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் ஆணையம், மனித உரிமைகளின் பாதுகாப்பை வலுப்படுத்தி நீதியை முன்னெடுத்துச் சென்று பொறுப்புத் தன்மையையும், மரியாதையையும் நிலைநாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மனித உரிமைகள் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 24 லட்சம் வழக்குகளில், கடந்த 33 ஆண்டுகளில் 23 லட்சத்திற்கும் மேற்பட்டவைகளுக்கு தீர்வு காணப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖

மத்திய அரசு

மருத்துவ நிறுவனங்களில் பெறப்படும் சேவை வசதிகளுக்கான கட்டண விகிதங்களை அட்டவணைப் படுத்த அனைத்து மாநிலங்களையும், யூனியன் பிரதேசங்களையும் மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

நோயாளிகள் சிகிச்சை குறித்து தெளிவான முடிவு எடுக்கவும், கட்டணம் தொடர்பான சர்ச்சைகளை தவிர்க்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மருத்துவ சிகிச்சை கட்டணங்களில் வெளிப்படைத் தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உள்ள மத்திய அரசு, ஆயுஷ் விசாக்களில் இந்தியா வரும் வெளிநாட்டு நோயாளிகளுக்கான தொகுப்பு கட்டணங்களையும் வெளிப்படையாக காட்சிப்படுத்த அறிவுறுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖

சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்த நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற பிரதமரின் தொலைநோக்கு பயணத்தின், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, சர்வதேச யோகா தினம் குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் வேண்டுகோளுக்கு ஏற்ப, ஜூன் 21-ம் தேதி சர்வதேச யோகா தினமாக ஐ.நா. சபை அறிவித்த நிலையில், 2015-ம் ஆண்டுமுதல் இத்தினம் சர்வதேச யோகா தினமாக கொண்டாடப் பட்டு வருகிறது.

இதனால் யோகக் கலைக்கு உலகளவில் அங்கீகாரம் கிடைத்ததுடன் உடல்நலம், மனநலம், சமச்சீர் உணவு போன்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஆயூஷ் அமைச்சகம் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுடன் நாடுமுழுவதும் யோகா பயிற்சி திட்டங்களை முன்னெடுத்துச் சென்றது.

யோகா கலை மற்றும் தியானத்தின் மையமாக ரிஷிகேஷ் உருவெடுத்துள்ள நிலையில் அதன் ஆன்மீக கலாச்சாரம், இமயமலையையும் கங்கையையும் உள்ளடக்கிய அதன் சுற்றுச்சூழல் வெளிநாட்டினரையும், உள்நாட்டினரையும் பெருமளவில் ஈர்த்தது.

ஆரோக்கியமான சமச்சீரான வாழ்க்கையை உறுதி செய்யும் யோக கலைக்கு உலகளாவிய அங்கீகாரத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி ஏற்படுத்தி உள்ள நிலையில் யோகக் கலை குறித்த சிறப்புகள் சர்வதேச நாடுகளில் பரவி வருவது குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய யோகக்கலை குறித்து திருச்சியை சேர்ந்த யோகா ஆசிரியர் திரு. பெ. விஜயகுமார் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

பதவியேற்பு

மதுராந்தகம் தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் வெற்றிபெற்ற த.வெ.க. உறுப்பினர்கள் திருமதி. மரகதம் குமரவேலும், திருமதி. சத்தியபாமாவும் சட்டப்பேரவை உறுப்பினர்களாக இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர்.

சென்னை தலைமை செயலகத்தில் பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் முன்னிலையில் இருவரும் பதவியேற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து இருவரும் முதலமைச்சர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

❖❖❖❖❖❖❖

அன்புமணி ராமதாஸ்

தமிழ்நாட்டில் அதிகரிக்கும் அரசி, பருப்பு விலையை கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர். அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஜூலை மாதம் தொடங்கி தற்போது வரை 3 மாதங்களில் அரிசி விலை படிப்படியாக அதிகரித்து கிலோவிற்கு 27 ரூபாய் வரை உயர்ந்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

பருப்பு வகைகளின் விலையும் ஏற்றம் கண்டுள்ளதால், ஏழை, நடுத்தர குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறை கூறினார்.

❖❖❖❖❖❖❖

கூட்டுறவு சிறப்பு கடன் முகாம்

தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ஒருலட்சத்து 80 ஆயிரம் கோடி கடன்வழங்கும் இலக்கை அடைய வாரந்தோறும் சிறப்பு கடன் முகாம்கள் நடைபெறும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமைகளில் சிங்கப்பெண்கள் மற்றும் வீட்டுவசதி கடன்கள் முகாமும், வெள்ளிக் கிழமைகளில் இதர முன்னுரிமை கடன்கள் முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

வேலூர்

வேலூர் மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வீடுகளில் சூரிய மின்தகடுகள் பொருத்தும் திட்டத்தை நடைமுறைப் படுத்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லீலா அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

உப்பு

தூத்துக்குடி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் உப்பு உற்பத்தி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கு சிறப்பாக சேவையாற்றிய தனிநபர் மற்று நிறுவனங்கள் மாநில அரசின் விருது பெற வரும் 22-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நல்லசிவன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித் தொகை, சாலை, குடிநீர் வசதி தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவில் ஸ்ரீ ரெங்கநாச்சியார் நவராத்திரி உற்சவம் இன்று தொடங்குகிறது.

தாயார் மூலஸ்தானத்திலிருந்து மாலை ஆறரை மணிக்கு புறப்பாடு கண்டருளி கொலு மண்டபத்தில் எழுந்தருள்கிறார்.

முக்கிய நிகழ்வான தாயார் திருவடி சேவை வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

Maia Open டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் – போர்ச்சுக்கலின் **Henrique Rocha**-வை இன்று எதிர்கொள்கிறார்.

இந்த போட்டி போர்ச்சுக்கல்லில் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖